# பனித்துளி செய்திகள்!



**"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**07.02.2022**

## 2. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்திடும் பாக்கியம்!

'இப்போது' விசுவாசித்தவர்களாகிய நாம் இளைப்பாறுதலில் - Rest பிரவேசித்திட முடியும்.... மரித்தபின்பு அல்ல! (எபி.4:3-4) எதை விசுவாசித்திட வேண்டும்? உலகத்தோற்றம் முன்பே 'தம்முடைய கிரியைகளை' நமக்காக செய்து முடித்தார், என்றே விசுவாசிக்க வேண்டும்!

அவ்வாறு விசுவாசித்தவன் அறிந்த உண்மை என்னவென்றால், 'இன்று அவன் செய்திட விரும்பும் சொந்த கிரியைகளை' (Self Will) ஒழித்துவிட்டு, தனக்காக தேவன் செய்து முடித்த கிரியைகளில் (His Will) ஓய்ந்திருப்பான்! எப்போதெல்லாம் 'சுய கிரியை' நம்மை அலைக்கழிக்கிறதோ, உடனே ஓடிச்சென்று, ''தேவனுடைய கிரியையாகி'' இளைப்பாறுதலின் கதவை திறந்து பிரவேசித்திடக்கடவோம்! (வச.7) ஒவ்வொரு நாளும் இளைப்பாறுதலின் பாக்கியமே, பாக்கியம்!

- ரத்னம்